கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

முதலாம் வருட/முதலாம் அரையாண்டு பொதுக் கலைமாணித் தேர்வு - 2004/2005 (ஜனவரி/பெப்ரவரி 2006)

# GEO 1101 புவியியலின் அடிப்படைகள்

நேரம் : 02 மணித்தியாலங்கள்

இலங்கை புறவரிப்படம் உலக புறவரிப்படம் வழங்கப்படும்.

பகுதி – I இல் எல்லா வினாக்களுக்கும் பகுதி – II இல் இரு வினாக்களுக்கும் பகுதி – III இல் ஒரு வினாவுக்கும் விடை தருக.

## பகுதி – I

01. 1. ஞாயிற்றுத் தொகுதியின் தோற்றம் குறித்து வெளியிடப்பட்ட கருத்துக்களுள் மூன்றினை சுருக்கமாகத் தருக.

2. புவியின் உட்பாகம் 'கெட்டியானது' என்பதற்கு முன்வைக்கப்பட்ட மூன்று சான்றுகளையும் 'பாகுபோன்றது' என்பதை உறுதிப்படுத்துவதற்காக முன்வைக்கப்பட்ட மூன்று சான்றுகளையும் தருக.

3. மாறன் மண்டலத்தின் குணவியல்புகளை சுருக்கமாகக் கூறுக.

4. புவியில் சக்திச் சமநிலை எவ்வாறு பேணப்படுகிறது?

5. பச்சை வீட்டு விளைவு என்பது கருதுவது யாது?

6. பிரதேச எண்ணக்கரு என்பதால் கருதப்படுவது யாது?

7. சூழல் ஆதிக்கவாதம் மானிட ஆதிக்கவாதம் என்பதனை வேறுபடுத்துக.

8. இனக் கொள்கை என்பதனை வரையறுக்குக.

9. இனப்பாகுபாட்டில் கையாளப்படும் உடற்கூற்றுப் பண்புகள் யாவை?

10. ஒரு நாட்டின் குடித்தொகை வளர்ச்சி எவ்வாறு அளவிடப்படுகின்றது.

(3 x 10 = 30 புள்ளிகள்)

## பகுதி – II

02. (i) சுண்ணக்கற் பிரதேசங்கள் இலங்கையில் காணப்படும் பகுதியினை இலங்கைப் படத்தில் குறித்துக் காட்டுக.
(03 புள்ளிகள்)

(ii) "சுண்ணக்கற் பிரதேசங்களில் பொறிமுறையாலழிவு, இரசாயன முறையாலழிவு இரண்டும் இணைந்து செயற்படுகின்றது." இக்கூற்றை ஏற்றுக்கொள்கிறீரா? சுருக்கமாக விளக்குக.
(07 புள்ளிகள்)

(iii) சுண்ணக்கற் பிரதேசங்களில் ஏற்படும் நிலவுருவங்களை புனையா வரிப்படங்களின் துணையுடன் விளக்குக.
(10 புள்ளிகள்)

03. (i) மானிடப் புவியியலின் நோக்கம் யாது? (03 புள்ளிகள்)

(ii) மானிடப் புவியியலின் உப ஒழுங்கு நெறிகளை அட்டவணைப் படுத்துக.
(07 புள்ளிகள்)

(iii) மானிடப் புவியியலின் அண்மைக்கால நிலை பற்றி விளக்குக.
(10 புள்ளிகள்)

04. (i) பெயர்ச்சிப் பயிர்ச் செய்கை என்பதால் கருதப்படுவது யாது?
(03 புள்ளிகள்)

(ii) பெயர்ச்சிப் பயிர்ச் செய்கையின் முக்கியமான பண்புகள் யாவை?
(08 புள்ளிகள்)

(iii) "குடித்தொகை அழுத்தங்களும், புதிய விவசாய தொழில் நுட்பங்களும் செறிவான பிழைப்பூதிய பயிர்ச் செய்கையில் மாற்றங்களை ஏற்படுத்தி வந்துள்ளன." இக்கூற்றின் பொருத்தப்பாட்டை சுருக்கமாக குறிப்பிடுக. (09 புள்ளிகள்)

## பகுதி – III

05. "உட்புறவிசைகளும் (இழுவிசை, தள்ளுவிசை) வெளிப்புற விசைகளும் இணைந்து தொழிற்படுவதனால் தோன்றியவையே இன்றைய நிலவுருவங்களாகும்." இக்கூற்றினை உதாரணங்கள் விளக்குக.
(30 புள்ளிகள்)

06. உலகின் குடித்தொகைப் பரம்பலில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளைக் குறிப்பிட்டு அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் குடித்தொகை வளர்ச்சிப்போக்கு பற்றி உதாரணங்கள், தரவுகளுடன் ஆராய்க. 30 புள்ளிகள்